தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
**TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY**
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiammam Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in; Email:registrar@tnteu.ac.in

**No.TNTEU/R/Admin/2025/** 00651 **Date: 29.04.2025**

**Dr.K.Rajasekaran, Ph.D.,** ***WEB POST***
Registrar i/c

**பெறுநர்:**

முதல்வர்கள் / செயலர்கள்,
இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

**ஐயா / அம்மையீர்,**

**பொருள்:** TNTEU - இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - வன்கொடுமை தடுப்புச்சட்டம் - மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 29.03.2025 அன்று நடைபெற்றது – விவரங்கள் சமர்பிக்கக் கோருதல் - தொடர்பாக.

**பார்வை:** கடித எண்.2482/ஏ2/2024-1, நாள்: 03.04.2025, அரசு இணைச்செயலாளர், உயர் கல்வித் (ஏ2) துறை, தலைமைச்செயலகம், சென்னை -9.

-----------

மேற்காண் பார்வையின்படி, மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 29.03.2025 அன்று நடைபெற்றது. இதில் அனைத்து கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பிற மாணாக்கர்களுக்கென தனித்தனியாக மிதிவண்டி / மோட்டார் வாகனம் நிறுத்துமிடங்கள் வைக்கப்பட்டுள்ளனவா என்பதை அந்தந்த கல்லூரி முதல்வர்கள் ஆய்வு செய்து அதன் மீதான அறிக்கை அனுப்புமாறு கூறப்பட்டுள்ளது

எனவே, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகளின் முதல்வர்களும் தங்கள் கல்லூரியில் மேற்குறிப்பிட்ட வாகனம் நிறுத்துமிடங்கள் பற்றி ஆய்வு செய்து அதன் மீதான அறிக்கையினை உடனடியாக இப்பல்கலைக்கழகத்தில் சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

K. [signature] 29/4/25
பதிவாளர் (பொ)

**இணைப்பு:** கடித எண்.2482/ஏ2/2024-1, நாள்: 03.04.2025 அரசு இணைச்செயலாளர், உயர் கல்வித் (ஏ2) துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.

உயர் கல்வித் (ஏ2) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

கடித எண்.2482/ஏ2/2024–1, நாள் 03.04.2025

அனுப்புநர்
அரசு இணைச் செயலாளர்,
உயர்கல்வித் துறை.

பெறுநர்
கல்லூரிக் கல்வி ஆணையர், சென்னை – 15.
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை – 25.
உயர்கல்வித் துறைக்குட்பட்ட அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.

ஐயா / அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – வன்கொடுமை தடுப்புச் சட்டம் – மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் காண்காணிப்புக் குழுக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 29.03.2025 அன்று நடைபெற்றது – விவரங்கள் கோருவது – தொடர்பாக.

-----

மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் காண்காணிப்புக் குழுக் கூட்டம் (வன்கொடுமை தடுப்புச் சட்டம்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 29.03.2025 அன்று நடைபெற்றது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இந்நிலையில், அனைத்து கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பிற வகுப்பினைச் சார்ந்த மாணாக்கர்களுக்கென தனித்தனியாக மிதிவண்டி / மோட்டார் வாகனம் நிறுத்திமிடங்கள் வைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆய்வு செய்ய அந்தந்த கல்லூரி முதல்வர்களை அறிவுறுத்துமாறும், அதன் மீதான அறிக்கையினைப் பெற்று அரசுக்கு உடன் அனுப்புமாறும் தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு இணைச் செயலாளருக்காக